# பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை
# ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
# Chief Secretary's Secretariat, Northern Provincial Council

63, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
63, නල්ලූර් හරස් පාර, නල්ලූර්, යාපනය.
63, Nallur Cross Street, Nallur, Jaffna.

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com


My No: NP/09/FRM/CIR-FIN/02/14/2017 26.12.2017

மாகாண நிதிச் சுற்றுநிருப இல:- PF/06/2017

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

## மாகாணக் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டம்

அரச பொதுக் கணக்குகள் குழுவால் இயங்கலை (Online) மூலம் மேற்கொள்ளப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுச் சுட்டிகளில் மாகாண கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டம் நடாத்தப்படல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, நிதி மற்றும் நிர்வாக விடயங்கள் சிறப்பாகக் கையாளப்படுவதனை உறுதிப்படுத்தும் வகையில் மாகாணக் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டங்களை 2018ம் ஆண்டிலிருந்து அரையாண்டிற்கு ஒரு தடவை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில் இக்குழுவில் பின்வருவோர் உள்ளடங்கப்படல் வேண்டும்.

1. பிரதம செயலாளர் - தலைவர்
2. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் - செயலாளர்
3. ஆளுநரின் செயலாளர் - உறுப்பினர்
4. செயலாளர், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு - உறுப்பினர்
5. செயலாளர், பேரவைச் செயலகம், வ.மா - உறுப்பினர்
6. மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் - உறுப்பினர்கள்
7. உதவிக் கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தின் பிரதிநிதி - உறுப்பினர்
8. பிரதிப் பிரதம செயலாளர்கள் - உறுப்பினர்கள்

மேலும், குறித்த மாகாணக் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் பற்றி மீளாய்வு செய்யப்படும்.

- பாராளுமன்றப் பொதுக் கணக்குகள் குழு அறிக்கை
- மாகாண பொதுக் கணக்குகள் குழு அறிக்கை
- மாகாண அமைச்சுக்கள் ரீதியான கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்ட விடயங்கள்

- பிரதம உள்ளகக் கணக்காய்வாளரால் உள்ளகக் கணக்காய்விற்குட்படுத்தப்பட்டு தீர்வு செய்யப்படாத விடயங்கள்
- இரு மாதங்களிற்கு மேற்பட்ட பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்
- கடந்த ஆண்டிற்கான செயலாற்று அறிக்கை ( முதலாம் அரையாண்டுக் கூட்டத்தில்)

ஆகவே, இம் மாகாணக் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தினூடாக மாகாணத்தின் வினைத்திறனான செயற்பாட்டிற்கு அனைவரையும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**அ.பத்திநாதன்**
**பிரதம செயலாளர்**

**பிரதிகள்:-**

1. கௌரவ ஆளுநரின் செயலாளர் - வ.மா - கௌரவஆளுநர் அவர்களிற்கு அறியத்தருவதற்காக
2. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா } தகவலுக்காக
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் - வ.மா } தகவலுக்காக